**இரத்தினபுரி பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 29 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த வருடங்களிற்கான முத்திரைக் கட்டண குறை பில்லிடல் ரூபா 9,155,365 இற்கான சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் கடந்த ஆண்டு சீராக்கத்தை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | கடந்த வருடங்களிற்கான நீதிமன்ற தண்டப்பணம் குறை பில்லிடல் ரூபா 5,237,840 இற்கான சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய வருமானம் மற்றும் கடந்த ஆண்டு சீராக்கத்தை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (இ) | பட்டியல்கள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த வேலைகளிற்காக ரூபா 1,035,167 ஆன கடன்கொடுனர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான கடன்கொடுனர் ஏற்பாடு ரூபா 637,450 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானங்கள் செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | கணக்காய்வு அவதானத்தை ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வாண்டிற்கான அட்டுறு செலவு ரூபா 677,344 கணக்கீடு செய்திருக்கவில்லை. | ஆண்டிற்கான செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்குளை தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | நிர்மாண வேலைகளிற்காக செலுத்த வேண்டிய மற்றும் அதற்காக மாகாண சபையிலிருந்து பெற வேண்டிய ரூபா 174,600 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்குளை தயாரிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (எ) | 06 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதிகள் மற்றும் உபயோக பதிவேட்டு மீதிகள் பிரகார மீதிகளிற்கிடையில் ரூபா 12,594,657 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் உபயோக பதிவேடுகளை இணக்கஞ் செய்து காணப்படும் வித்தியாசத்தை இனங்கண்டு சரி செய்ய வேண்டும். | இவ்வித்தியாசம் நீண்ட காலமாக காணப்படுவதாகவும், எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன |
| (ஏ) | 2008 ஆண்டிற்கு முன்னிருந்து நிலவி வரும் கூட்டுத் தொகை ரூபா 484,308 ஆன 08 கணக்கு விடயங்களிற்குரிய விரிவான அட்டவணைகள் கணக்காயவிற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை முன்வைக்கப்பட வேண்டும். | இம் மீதிகள் தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

-------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2012 முதல் 2016 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 3,185,328 காலாவதியான 37 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2020 ஆண்டு இறுதியில் வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினரிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை | எதிர்காலத்தில் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண வேண்டும். | அறிவூட்டி குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |
| (ஈ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ-ள்ளூராட்சி 01 ஆம் இலக்கம் உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு சேவை பெறுனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க வேண்டும். | தொழிநுட்ப வசதிகளை தற்போது பெற்றிருப்பதாகவும், எதிர்காலத்தில் அலுவலர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்கி குறித்த வசதிகளை அமைக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,058,791 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,913,203 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 1,822,010 | 2,034,660 | 2,047,205 | 57,844 | 1,191,240 | 1,329,515 | 1,316,043 | 69,496 |
| (ii) | வாடகை | 5,060,000 | 102,540 | 102,540 | - | 481,400 | 46,800 | 46,800 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 790,200 | 1,372,023 | 1,372,023 | - | 706,650 | 634,600 | 634,600 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 25,281,000 | 40,017,388 | 53,338,157 | 5,066,648 | 19,598,000 | 21,630,338 | 37,833,060 | 18,391,992 |
| | | 32,953,210 | 43,526,611 | 56,859,925 | 5,124,492 | 21,977,290 | 23,641,253 | 39,830,503 | 18,461,488 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் வீதவரி அறவிட 06 முன்னேற்ற கிராம பிரதேசங்கள் 2014 ஜுன் 30 திகதியளவில் இனங்கண்டிருந்த போதும், முன்னேற்ற கிராம பிரதேசங்களின் வரைபடத்தை பிரசித்திப்படுத்தல் 2019 ஒக்டோபர் வரை தாமதித்திருந்தமை காரணமாக வீதவரி அறவிட முடியாமலிருந்தது. | சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானத்தை சேகரிக்க தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும். | சபை அதிகார எல்லையில் வீத வரி அறவிடல் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 07 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமை மற்றும் 2019 ஆண்டில் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்க வேண்டிய 06 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் புதுப்பித்திருக்காமை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக ரூபா 52,000 ஆன வருமானத்தை சபை இழந்திருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய அனைத்து நிறுவனங்களுக்கும் முறையாக அனுமதிப்பத்திரம் விநியோகிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க விடய பொறுப்பு அலுவலர் அறிவூட்டப்பட்டதாக அறிவிக்கிறேன். |

### 2.2.4 விளம்பரப் பலகை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபை அதிகார எல்லையில் விளம்பரப்படுத்தியுள்ள 12 விளம்பரப் பலகைகளிற்காக கட்டணம் செலுத்தாததால் கலற்றி அகற்றப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக அறவிட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 87,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை உரிய காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணம் செலுத்தாத விளம்பரப் பலகைகள் கலற்றி அகற்ற நடவடிக்கை எடுத்ததாக அறிவிக்கிறேன். |

### 2.2.5 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் உள்ள 19 தொலை தொடர்பு கோபுரங்களிலிருந்து மற்றும் 16 சிரிய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய வியாபார வரி ரூபா 87,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த வருமானம் அறவிடப்படுவகின்றதாக அறிவிக்கிறேன். |

### 2.2.6 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக இனங்காணப்பட்டிருந்த நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 1,030,250 ஆனதுடன், முத்திரைக் கட்டணம் ரூபா 6,361,804 ஆனது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதி மன்றத் தண்டப்பண கட்டணம் கிடைத்துள்ளதாகவும், முத்திரைக் கட்டண பட்டியலை பெற்று கொள்ள குறித்த நிறுவனங்கள் கடிதம் மூலம் அறிவூட்டப்பட்டுள்ளன. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் அதிகார எல்லையில் இளைஞர்களை இலக்காகக் கொண்டு ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவ பயிற்சி உள்ளிட்ட 05 பயிற்சி நிகழ்சித் திட்டங்கள் மற்றும் பாலர் பாடசாலை மற்றும் கர்பிணித்தாய்மார்களை பிரதானமாகக் கொண்டு 05 மக்கள் அபிவிருத்தி நிகழ்சித் திட்டங்களை நடாத்த திட்டமிட்டிருந்த போதும் அந் நிகழ்சித் திட்டங்கள் எதனையும் மீளாய்வாண்டில் செய்திருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிர் தாக்குதல் காரணமாக குறித்த செய்ற்பாடுகளை திட்டமிட்ட பிரகாரம் மேற்கொள்ள முடியவில்லை என அறிவிக்கிறேன். |

(ஆ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை அதிகார எல்லையில் உக்கலடையும் 100 டொன் கழிவுகள் மற்றும் 15 டொன் அளவான உக்கலடையா கழிவுகளும் மாதாந்தம் ஒன்று சேர்ந்த போதும், அதனை முகாமை செய்வது தொடர்பாக தேசிய கொள்கைகளுக்கு இணங்க கழிவு முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கொள்கைகளுக்கு இணங்க கழிவு முகாமைத்துவ திட்டமொன்றை தயாரித்து நடைமுறைபடுத்த வேண்டும். | திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டத்தை தயாரித்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2018 மற்றும் 2019 ஆண்களின் செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் திண்மக் கழிவு முகாமை தொடர்பாக பாடசாலை மாணவர்களை அறிவூட்டும் 13 வேலைத் திட்டங்களை நடாத்த மற்றும் கொம்போஸ்ட் கருத்திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த போதும் அச் செயற்பாடுகள் எதனையும் மீளாய்வாண்டு இறுதிவரையும் மேற்கொண்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாட்டில் ஏற்பட்ட உயிர்த்த ஞாயிர் தாக்குதலுடன் ஏற்பட்ட தெளிவற்ற நிலை காரணமாக செயல் நடவடிக்கை திட்டத்திற்குரிய வேலை திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை என அறிவிக்கிறேன். |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 நிகழ்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கங்களிற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை தரத்தை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 திசெம்பர் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டங்களை தயாரித்து செயற்படுத்த வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிரைவேற்ற நீண்ட கால நோக்கங்களை பிரதானமாகக் கொண்டு சில வேலைத் திட்டங்களை திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.2 மனித வள முகாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 வருடாந்த பயிற்ச்சித் திட்டத்திற்கு அமைய செயற்படுத்த வேண்டியதாக இருந்த 12 பயிற்ச்சி வேலைத்திட்டங்களில் 08 பயிற்ச்சி வேலைத்திட்டங்களை செயற்படுத்தி இருக்வில்லை. | அலுவலர்களுக்காக வழங்க வேண்டிய பயிற்ச்சி சந்தர்ப்பங்களை உரிய முறையில் வழங்க வேண்டும். | வருடாந்த திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்தவிருந்த பயிற்ச்சி வேலைத்திட்டங்களை நாட்டில் நிலவிய நிலையற்ற தன்மை காரணமாக தாமதமானது என அறிவிக்கிறேன். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் காணப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்கண்டு அவற்றை அகற்ற அல்லது ஒழுங்கமைப்பது தொடர்பாக முறையான முறைமையொன்றை சபை பின்பற்றி இருக்கவில்லை. | அனுமதியற்ற நிர்மாணங்களை இனங்காண்பதற்காக முறையான நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக இது வரை பிரச்சினையான நிலைமையொன்று ஏற்பட வில்லை எனவும் பொது மக்களினால் செய்யப்பட்ட முறைப்பாடுகளிற்காக தொழில் நுட்ப அலுவலரின் பரிந்துரையின் மீது தீர்வு வழங்கப்பட்டதாக அறிவிக்கிறேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுகளை ஒன்று சேர்க்க வீடுகளிற்கு பகிர்ந்தளிக்கும் நோக்கில் 2019 ஓக்டோபர் 10 திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 280,870 பெறுமதியான 1000 குப்பை பாத்திரங்கள் 2020 ஜுன் 15 வரையும் பகிர்ந்தளிக்காது சபை வளவில் இடப்பட்டிருந்தன. | குறித்த குப்பை பாத்திரங்களை நோக்கத்துடனான செயற்பாடுகளிற்கு பயன்படுத்த விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொவிட் தொற்று நோய் காரணமாக திட்டமிட்ட பிரகாரம் குப்பை பாத்திரங்களை பகிர்ந்தளிக்க முடியவில்லை எனவும், தற்போது அச் செயற்பாடுகளை துரிதப்படுத்தியுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

### 3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டு முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட 05 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்துவதற்கு அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதிவு ஆவனங்களை பூர்த்தி செய்து கொண்டு கூடிய விரைவில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புதிய சபை நிருவி ஒரு வருட பூர்த்திக்காய செயற்படுத்தப்பட்டிருந்த பொருள் உதவி மற்றும் உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் வேலைத் திட்டத்தில் உள்ளடங்கும் ரூபா 2,724,115 பெறுமதியான வீட்டு உதவி மற்றும் மலசல கூட உதவி பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. சபை நிதியத்திலிருந்து ரூபா 796,432 செலவில் விலை மனு கோராது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 45 உருக்கு கபட்களில் தவிசாளரின் அன்பளிப்பு எனும் ஸ்டிகர் ஒட்டப்பட்டு இருந்ததுடன், அவ் ஸ்டிகர்களிற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 3,670 செலவிடப்பட்டிருந்தது. அதே போன்று ஆளுனரின் அங்கீகாத்திற்கு முரணாக ரூபா 73,080 செலவிட்டு விளையாட்டுக் கழகங்களிற்கு விளையாட்டு உபகரணங்கள் பகிரப்பட்டிருந்தன. | போதிய ஒதுக்கீட்டை பெற்றுக் கொண்டு வேலைத் திட்டத்தை செயற்படுத வேண்டியதுடன், கொள்வனவுகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் பெறுகைகள் வழிகாட்டிக்கமைய மேற்கொள்ள வேண்டும். பொது நிதியத்தினால் செய்யும் அன்பளிப்பை தனிப்பட்ட அன்பளிப்பாக காட்டுவது பொருத்தமற்றதாகும். | இரத்தினபுரி பிரதேச சபையின் வருட பூர்த்தி கொண்டாட்ட விழாவிற்கு மதிப்பிற்குரிய ஆளுனரின் அங்கீகாரத்தின் மீது குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், தவிசாளரின் கட்டளைப்படி கபட்களிற்கு ஸ்டிகர் ஒட்டப்பட்டதாகவும் அறிவிக்கிறேன். |

### 3.6 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தவிசாளரினால் கடமைக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கையில் 2014 ஆண்டு விபத்துக்குள்ளாகி இருந்த கெப் வண்டி தொடர்பாக நிதிப் பிரமானம் 103 மற்றும் 104 | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்க | 2014 ஆண்டு நிகழ்ந்த இவ் விபத்து தொடர்பாக அப்போதைய விடய பொறுப்பு அலுவலர்கள் ஏன் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| பிரகாரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. மேலும், விபத்து தொடர்பாக காப்புறுதி இழப்பீடு கோரல் உரிய காலப் பகுதியில் சமர்பிக்கப்படாததால் உரிமை கோரிக்கை மறுக்கப்பட்டிருந்ததுடன், கெப் வண்டியின் திருத்தத்திற்காக ரூபா 261,850 சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | வேண்டும். | எடுக்கவில்லை என கண்டறியவும் ஏற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடவும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.7 பெறுகை**

**3.7.1 பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்காத போதும் ரூபா 10,640,268 பெறுமதியான பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | மக்கள் தேவைகளை விரைவாக நிரைவேற்ற அனைத்து முக்கிய கொள்வனவுகளையும் விலை சபையின் அங்கீகாரம் மற்றும் சபை தீர்மானம் பிரகாரம் மேற்கொண்டதாகவும் 2020 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

**3.7.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுகைகள் வழிகாட்டி கோவை 3(4)(3)(இ) இற்கு முரணாக விலை மனு கோராது ரூபா 128,655 செலவில் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | வேலை, பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்ளும் எல்லா சந்தர்ப்பங்களிலும் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவிசாளரின் கட்டளை மீது இக் கொள்வனவு விரைவில் மேற்கொள்ளப்பட்டதாகவும், நள்ள நிலையில் மற்றும் நீண்ட கால ஆயுளுடைய பொருட்கள் பற்றி கவனம் செலுத்தி அதற்காக பொருத்தமான தனியார் நிறுவனமொன்றை சபையொன்றினால் தகைமைபடுத்தியிருந்ததால் அந் நிறுவனத்திடம் கொள்வனவு செய்ததாகவும் அறிவிக்கிறேன். |

**3.7.3 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட 14 வேலைகளிற்குரியதாக கூட்டுத் தொகை ரூபா 162,723 மேலதிகமாக செலுத்தியிருந்தது. | மேலதிக கொடுப்பனவு மீள் அறவிடப்பட வேண்டும். | மேலதிக கொடுப்பனவை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |